**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் அவர்களின்**
**செயல்முறை ஆணை, சென்னை – 18.**

**முன்னிலை : திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,**
**ஆணையர்.**

ந.க.875/2022/கூதே1(3) நாள் : 11.01.2023

பொருள் : கூட்டுறவுச் சங்க தேர்தல் 2023 – நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் தலைவர்/துணைத்தலைவர் தேர்தல்கள் - தொழில் வணிகத்துறை - மாவட்ட தேர்தல் அலுவலர் நியமனம் வழங்கியது – மாற்றம் செய்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள் நியமனம் செய்தல் – தொடர்பாக.

பார்வை :

1. தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தின் செயல்முறை ஆணை ந.க.875/2022/கூதே1, நாள் 12.09.2022.
2. தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிகத்துறை கடித எண்.ந.க.26235/ICA/2022-1 நாள் 10.01.2023.

*****

**ஆணை:**

பார்வை 1-ல் காணும் ஆணையத்தின் செயல்முறை ஆணைப்படி, தொழில் ஆணையர் தொழில் வணிகத்துறை இயக்குநரின் மாவட்ட அளவிலான நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்திட மாவட்ட தேர்தல் அலுவலர்களை ஆணையம் நியமனம் செய்தது.

மேலும் பார்வை 2-ல் காணும் கடிதத்தின்படி மாவட்ட தேர்தல் அலுவலர்கள் பட்டியலில் திருப்பூர், பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் அவர்களை மாவட்ட தேர்தல் அலுவலராக சேர்த்தும், நீலகிரி மாவட்ட தேர்தல் அலுவலராக இணை இயக்குநர் (IC) (Tea) என மாற்றம் செய்து வழங்கவும் கோரப்பட்டுள்ளது.

இக்கோரிக்கையினை ஆணையம் கவனமுடன் பரிசீலித்து அதனை ஏற்று இணைப்பில் கண்டுள்ள அலுவலர்களை அவர்கள் நிர்வாக கட்டுப்பாட்டிற்குட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட தேர்தல் அலுவலராக 1988-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் விதி எண்.52-A(4)-ன் கீழ் தனக்களிக்கப்பட்ட அதிகாரத்தினை கைக்கொண்டு நியமனம் செய்து ஆணையம் ஆணையிடுகிறது.

இவ்வாறு நியமிக்கப்பட்ட மாவட்ட தேர்தல் அலுவலர்கள் நியமனம், அவை தொடர்பாக மாற்று ஆணை ஏதும் பிறப்பிக்கப்படாத வரை, புதிய நியமன ஆணைகள் ஏதும் தேவைப்படாத, தொழில்

வணிக துறையின் மாவட்ட அளவிலான நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் வரும் (Administrative Control) சங்கங்களின் ஒட்டுமொத்த தேர்தல் (Enmasse Elections) மற்றும் அவை தவிர்த்த இதர வகையிலான தேர்தல்கள் (Other than Enmasse Elections) மற்றும் காலியிடங்களுக்கான தேர்தல்கள் அனைத்திற்கும் பொருந்துவதாகும் என்றும் **அவர்கள் மாவட்ட தேர்தல் அலுவலர்களாக தொடர்ச்சியாக இருந்து வருவார்கள் (Shall continue as DEO's) என்றும் ஆணையம் அறிவிக்கிறது.**

இவ்வாறு விதி எண்.52-A(4)-ன் கீழ் ஆணையத்தால் நியமிக்கப்படும் மாவட்ட தேர்தல் அலுவலர் அவ்விதியில் கட்டளையிட்டுள்ளபடி (Mandate) தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வை, கட்டளைகள் மற்றும் கட்டுப்பாட்டிற்குட்பட்டு, அவர்கள் சம்மந்தப்பட்ட நிர்வாக கட்டுப்பாட்டின்கீழ் உள்ள சங்கங்களை பொறுத்து, வாக்காளர் பட்டியல் தயாரித்தல், வெளியிடுதல் மற்றும் அச்சங்கங்களுக்கான நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் அலுவல் நிர்வாகிகளுக்கான (Members of the Board and Office Bearers) தேர்தல் நடத்த ஒத்துழைத்து மற்றும் மேற்பார்வை செய்தல் வேண்டும் என்பதுடன், ஆணையத்தால் அவ்வப்போது அவர்களுக்கு ஒப்படைக்கப்படும் செயல்பாடுகளை செயற்படுத்துதல் வேண்டும் என்றும் ஆணையம் அறிவிக்கிறது

இவ்வகையில் இது தொடர்பாக ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள பார்வை 1-ல் காணும் ஆணையத்தின் செயல்முறை ஆணை ரத்து செய்யப்படுகிறது.

ஒம்/-
ஆணையர்

ஆணையருக்காக

இணைப்பு : மேற்கண்டவாறு

**பெறுநர்**

மாவட்ட தேர்தல் அலுவலர்கள்
(தொழில் துறை ஆணையர் தொழில் வணிகத்துறை இயக்குநர்/ மாநில தேர்தல் அலுவலர் மூலமாக).

**நகல்**

1. தலைமைச் செயலாளர், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-9
2. அரசு முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, சென்னை-9.
3. அரசு செயலாளர், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, சென்னை - 9.
4. அலுவலக இருப்புக் கோப்பு.
5. கணினி ஆளுமையாளர்.

| இணைப்பு | | | |
|---|---|---|---|
| ந.க.எண் 875/2022/கூதே1(3) | | | |
| வ.எண் | துறை | மாவட்டம் | பதவியின் பெயர் (Designation) |
| 1 | தொழில் வணிகத்துறை | அரியலூர் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 2 | தொழில் வணிகத்துறை | சென்னை | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 3 | தொழில் வணிகத்துறை | செங்கல்பட்டு | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 4 | தொழில் வணிகத்துறை | கோயம்புத்தூர் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 5 | தொழில் வணிகத்துறை | கடலூர் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 6 | தொழில் வணிகத்துறை | தருமபுரி | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 7 | தொழில் வணிகத்துறை | திண்டுக்கல் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 8 | தொழில் வணிகத்துறை | ஈரோடு | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 9 | தொழில் வணிகத்துறை | கள்ளக்குறிச்சி | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 10 | தொழில் வணிகத்துறை | காஞ்சிபுரம் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 11 | தொழில் வணிகத்துறை | கரூர் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 12 | தொழில் வணிகத்துறை | கிருஷ்ணகிரி | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 13 | தொழில் வணிகத்துறை | மதுரை | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 14 | தொழில் வணிகத்துறை | மயிலாடுதுறை | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 15 | தொழில் வணிகத்துறை | நாகப்பட்டினம் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 16 | தொழில் வணிகத்துறை | நாகர்கோவில் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 17 | தொழில் வணிகத்துறை | நாமக்கல் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 18 | தொழில் வணிகத்துறை | நீலகிரி | இணை இயக்குநர், (IC) (Tea) |
| 19 | தொழில் வணிகத்துறை | பெரம்பலூர் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 20 | தொழில் வணிகத்துறை | புதுக்கோட்டை | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 21 | தொழில் வணிகத்துறை | இராணிபேட்டை | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 22 | தொழில் வணிகத்துறை | இராமநாதபுரம் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 23 | தொழில் வணிகத்துறை | சேலம் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 24 | தொழில் வணிகத்துறை | சிவகங்கை | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 25 | தொழில் வணிகத்துறை | தஞ்சாவூர் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 26 | தொழில் வணிகத்துறை | தேனி | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |

| வ.எண் | துறை | மாவட்டம் | பதவியின் பெயர் (Designation) |
|---|---|---|---|
| 27 | தொழில் வணிகத்துறை | தூத்துக்குடி | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 28 | தொழில் வணிகத்துறை | திருநெல்வேலி | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 29 | தொழில் வணிகத்துறை | திருவண்ணாமலை | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 30 | தொழில் வணிகத்துறை | தென்காசி | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 31 | தொழில் வணிகத்துறை | திருவள்ளூர் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 32 | தொழில் வணிகத்துறை | திருப்பத்தூர் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 33 | தொழில் வணிகத்துறை | திருவாரூர் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 34 | தொழில் வணிகத்துறை | திருச்சி | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 35 | தொழில் வணிகத்துறை | வேலூர் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 36 | தொழில் வணிகத்துறை | விழுப்புரம் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 37 | தொழில் வணிகத்துறை | விருதுநகர் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |
| 38 | தொழில் வணிகத்துறை | திருப்பூர் | பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம் |

ஒம்/-

ஆணையர்

4/1/23

ஆணையருக்காக

11/1/23